ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1659/2 - 2010 ජූනි 21 වැනි සඳුදා - 2010.06.21
*1659/2 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும்

### சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் 154 (ஆ) பிரிவின் (8) (அ) மற்றும் (8) (ஆ) உப பிரிவுகளினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் வி. ஐ. மு. லொக்குபண்டார ஆகிய என்னால் இப்பிரகடனத்தினால் இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஆனி மாதம் இருபத்திரண்டாம் திகதி நள்ளிரவில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் சப்பிரகமுவ மாகாண சபையின் பருவ காலக் கூட்டத் தொடர் நிறைவுபடுத்தப்படுவதாகவும் சப்பிரகமுவ மாகாண சபையின் அடுத்த பருவ காலக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் திகதியாக இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஆடி மாதம் இருபதாம் திகதி நிர்ணயிக்கப்படுவதாகவும் இத்தால் அறிந்து கொள்ளல் வேண்டும்.*

*இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஆனி மாதம் பதின்நான்காம் திகதியான இன்று இரத்தினபுரியில் வெளியிடப்பட்டது.*

வி.ஐ. மு. லொக்குபண்டார,
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

*7- 196*

---

### சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதின்மூன்றாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் 154 (ஆ) பிரிவின் (8) (அ) உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் வி. ஐ. மு. லொக்குபண்டார ஆகிய நான், இப் பிரகடனத்தினால் இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஆடி மாதம் இருபதாம் திகதி முற்பகல் பத்து மணிக்கு இரத்தினபுரி மாகாண சபைக் கட்டிடத் தொகுதியின் மாகாண சபைக் கூட்ட மண்டபத்தில் ஒன்று கூடுமாறு சப்பிரகமுவ மாகாண சபைக்கு உத்தரவுவிடுவதாக இத்தால் அறிந்து கொள்ளல் வேண்டும்.*

*இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு ஆனி மாதம் பதின்நான்காம் திகதியான இன்று இரத்தினபுரியில் வெளியிடப்பட்டது.*

வி.ஐ. மு. லொக்குபண்டார,
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

*7- 197*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.